## ‘ஒரு காலத்துல என்னவெல்லாம் பேசுனீங்க..?’

‘ஒரு நாட்டின் வளர்ச்சியைத் தடுக்க, அந்த நாட்டின் கல்வியில் கை வைத்தால் போதும்’ என்பார்கள். ஒன்றிய அரசு அதைத்தான் செய்கின்றது.

தேசிய கல்விக் கொள்கையையும், அதன்படி மும்மொழிக் கொள்கையையும் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்ளாத காரணத்தால், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்திற்கு ஒன்றிய அரசு, தான் வழங்க வேண்டிய 2,152 கோடி ரூபாயை நிறுத்தி வைத்திருந்தது. தற்போது அந்த நிதியை வேறு மாநிலங்களுக்கும் பிரித்து அளித்துள்ளதுடன், தமிழ்நாடு அரசின் நிதிப் பகிர்வு கோரிக்கைகளுக்கு மிக அலட்சியமான பதிலை அளித்துள்ளார் ஒன்றிய பா.ஜ.க. அரசின் முக்கிய அமைச்சரான பியூஷ் கோயல்.

கூட்டாட்சித் தத்துவத்தினையே மதிக்க மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சிக்கு, இது தொடர்பாக, தமிழ்நாட்டின் முதல்வர் உள்பட பல அரசியல் தலைவர்களும் கல்வியியல் அறிஞர்களும் எதிர்ப்பு தெரிவித்துக் கண்டனங்களைப் பதிவு செய்து வருகின்றனர்’

குஜராத் முதல்வராக மோடி இருந்த போது, 2012-ஆம் ஆண்டில் வெளியிட்ட ஒரு பதிவில், “குஜராத் மக்கள் 60 ஆயிரம் கோடி ரூபாயை அனுப்புகிறார்கள். அதற்கு ஈடாக, என்ன திரும்ப வருகிறது. குஜராத் என்ன பிச்சைக்காரர்கள் மாநிலமா?” என கேள்வி எழுப்பினார்.

இன்றைக்கு, அவர்கள் ஆளும் மாநிலங்களுக்கு பட்ஜெட்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்வதும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்காமல் புறக்கணிப்பதும், அற்ப சிந்தனை இல்லையா மிஸ்டர் பியூஸ் கோயல்?

## ஃப்ளாஷ்பேக்



சி.தண்டபாணி



### கழக பந்தத்தின் சாட்சி!

2009-ஆம் ஆண்டு நான் ஜோலார்பேட்டை நகரத் துணைச்செயலாளராகக் கழகப் பணியாற்றி வந்தேன். அப்போது என்னுடைய மைத்துனர் திருப்பத்தூர் நகரத் துணைச் செயலாளர் அவர்களின் மூத்த மகன் தீபன் அவர்களுடைய பிள்ளைக்குப் பெயர் சூட்டும் விழா ஏற்பாடு செய்யப்பட்டது, தளபதி அவர்கள் இந்நிகழ்விற்கு வருகை தந்து, மகனுக்கு ‘இனியவன்’ என்று பெயர் சூட்டினார். இதற்குப் பல ஆண்டுகள் முன்பு, என்னுடைய மகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘கழகக் கண்மணி’ என்று பெயர் சூட்டினார், கழகக் கண்மணிக்கு தளபதியார் அவர்கள்தான் தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்தார். அவருடைய பிள்ளைக்கு ‘வெற்றிச்செல்வி’ என்று தளபதி பெயர் சூட்டினார். இப்படித் தொடரும் கழக பந்தத்தின் சாட்சியமாக இப்படம் இருக்கிறது.

– **சி.தண்டபாணி, முன்னாள் நகரத் துணைச்செயலாளர், ஜோலார்பேட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### ‘வீடு முக்கியம்’

1962-ஆம் ஆண்டு நவம்பரில் ‘இந்திய - சீனப் போர்’ தொடங்கியிருந்த நேரம். ‘திராவிட நாடு’ கோரிக்கையைக் கைவிட்ட பேரறிஞர் அண்ணா, ‘நேரு தலைமையிலான இந்திய அரசுக்குத் துணை நிற்கும்’ என அறிவித்தார். கூடவே, கூட்டங்கள் நடத்தி, முதல் கட்சியாக ‘யுத்த நிதி’ திரட்டி வழங்கினார். அத்துடன் நில்லாமல், சீனப் படையெடுப்புக்கு எதிராகவும், இந்திய ஒற்றுமையை வலியுறுத்தியும் 7.1.1973 அன்று வானொலியில் உரையாற்றினார். ‘வீடு இருந்தால்தானே ஓடு மாற்ற முடியும்!’ என்று விளக்கமும் கொடுத்தார்.

## மாநாடு

ர.பிரகாசு 50

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




# நியாயத்திற்குப் போராட வேண்டும்!

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு மத்தியில், மானுட விடுதலைக்கான போராட்டத்தை, சுயமரியாதை இயக்கத்தின் வழியாக முன்னெடுத்துக் கொண்டிருந்தார் பெரியார். செங்கல்பட்டு, ஈரோடு, விருதுநகரில் நடைபெற்ற சுயமரியாதை மாநாடுகளைத் தொடர்ந்து, மாகாண அளவிலும், வட்டார அளவிலும் எண்ணற்ற சுயமரியாதை மாநாடுகள் நடைபெறத் தொடங்கின. பெரியார் இல்லாமல் சுயமரியாதை இயக்கத்தின் இரண்டாம் கட்ட தலைவர்கள் மட்டுமே கலந்துகொண்ட மாநாடுகளும் நடைபெறத் தொடங்கின.

அதில் 1932-ஆம் ஆண்டு செப்டம்பர் 3-ஆம் தேதி நடைபெற்ற ‘பட்டுக்கோட்டை சுயமரியாதை மாநாடு’ குறிப்பிடத்தக்கதாகும்.

மாநாட்டிற்கு குருசாமி - குஞ்சிதம், ரயில் நிலையத்திற்கு வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பிருந்தே ஏராளமானோர் அவர்களை வரவேற்க காத்திருந்தனர். அங்கிருந்து மாலைகள் சூட்டி, இரட்டைக் குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் இருவரும் முக்கிய வீதிகள் வழியாக, மாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அப்பகுதியைச் சேர்ந்த சுயமரியாதை இயக்க வீரர் காலஞ்சென்ற வேணுகோபால் பெயரில், பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. வாழை மரங்கள், தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்த பந்தலின் தூண்களில் கருத்தியல் பதாகைகள் எழுதி தொங்கவிடப்பட்டிருந்தன.

மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசிய குருசாமி, “என் வாழ்நாள் முழுவதும் இந்த இயக்கத்திற்கு வேலை செய்ய கடமைப்பட்டி ருக்கிறேன். இந்த சுயமரியாதை இயக்கத்தில் மற்ற இயக்கங்களைக் காட்டிலும் உண்மை அறிவும், படிப்பும் உடையவர்கள் அதிகம் இருக்கிறார்கள். ஈ.வெ.இராம சாமிக்கு முதன்முதல் மதராசில் பெரிய எதிர்ப்பு இருந்தது. ஆனால், மதராஸ் ஜனங்களே இந்த இயக்கத்தில், இப்போது பெரிதும் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளார்கள்” என்றார்.

வரவேற்புரையாற்றிய பட்டுக்கோட்டை அழகிரி, சுயமரியாதை இயக்கத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தினார். “இவ்வியக்கம் எல்லா மனிதர்களும் சமம் என்ற கொள்கையைக் கொண்டது. ஜனங்களுக்குப் பொருளாதார-சமூக விஷயங்களில் சமத்துவம் எய்தல் வேண்டும் என்னும் கருத்தை உறுதியாகக் கொண்டது.” என்றார்.

மாநாட்டுக்குத் தலைமையேற்றுப் பேசிய குஞ்சிதம் அம்மையார், “நமது இயக்கம் சைவ சமயத்திற்கு விரோதமாய் ஆரம்பிக்கப் பட்டது. அப்போது கிறிஸ்தவர்களும், மகமதி யர்களும் நம்முடன் ஒத்துழைத்தனர். பின்னர் கிறிஸ்தவர்களும், மகமதியர்களும் தாக்கப்பட, அன்னவர்கள் நம்மை எதிர்க்க முற்பட்டனர். ஆகவே சகல மத வைதீகர்களும் இன்று நம்மை எதிர்க்கிறார்கள். இது இயற்கைதான்.

16-ஆம் நூற்றாண்டில் லூதர் அனேக கஷ்டப்பட்டார். சாக்ரடீஸ் கஷ்டப்பட்டார், ஷெல்லி என்பவர் நாஸ்திகத்தின் அவசியம் என்பதை எழுதியபோது மிகவும் தாக்கப்பட்டார். ஆனால், இப்போது மகாகவியாக போற்றப்படு கிறார். ஆகையினால், நாம் அச்சமின்றி நியாயத்திற்குப் போராட வேண்டும்” என்று உலக அறிஞர்களையெல்லாம் அவர் நிகழ்த்திய உரையில், சுட்டிக்காட்ட, மெய் சிலிர்த்துப்போனது மொத்த கூட்டமும்.

**ஷெல்லி என்பவர் நாஸ்திகத்தின் அவசியம் என்பதை எழுதியபோது மிகவும் தாக்கப்பட்டார். ஆனால், இப்போது மகாகவியாக போற்றப்படுகிறார். ஆகையினால், நாம் அச்சமின்றி நியாயத்திற்குப் போராட வேண்டும்!**

உண்மையில், இந்த மாநாட்டுக்குத் தலைவர் குஞ்சிதம் அம்மையார் அல்ல. அவருடைய வருகைக்குப் பிறகே திடீரென அவரை தலைமையேற்கச் செய்துள்ளார் அழகிரி. அதற்கு நியாயம் சேர்க்கும் வகையில் ஆணித்தர மாக வெளிப்பட்டன அவரது கருத்துக்கள். அதன்பிறகு மீரா சாயுபு, சி.என்.விஸ்வநாதம், சாமுவேல், பழனிசாமி ஆகியோர் புரோகி தர்களின் புரட்டு, மூடப்பழக்க வழக்கங்கள், சுயமரியாதை இயக்கத் தத்துவம் ஆகியவற்றை விளக்கிப் பேசினர். மீண்டும் மாலையில், குருசாமி, அழகிரி ஆகியோர் விரிவான உரை நிகழ்த்தினர். இறுதியாக குஞ்சிதம் அம்மையார் முடிவுரையுடன், நள்ளிரவு 1 மணிக்கு மாநாடு முடிவுற்றது.

**...கூட்டம் திரளும்**

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் 50

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# தொடரும் பொருளாதாரப் புறக்கணிப்பு

ஓரவஞ்சனை ஒன்றிய அரசு. கடந்த வாரம் 2025-2026-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறது. ‘தமிழ்நாடு’ என்ற நம் மாநிலத்தின் பெயர், அதில் ஓரிடத்தில் கூட இடம்பெறவில்லை. பெயர் மட்டுமல்ல, நமக்கான திட்டங்களும் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை.

**வாரம் ஒரு தொழிற்சாலை, பம்பாயில் நிறுவப்பட்ட காலத்தில்தான் தமிழ்நாட்டில் ‘கதர் பிரச்சாரம்’ தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது.**




நம்மிடம் இருந்து வரியை மட்டும் பெற்றுக்கொண்டு, நமக்கு உரிமை யான நிதியை வழங்காமல் இருக்கும் அநீதி, இன்று நேற்றல்ல பேரறிஞர் அண்ணா காலம் முதலே தொடர்ச்சியாக நமக்கு இழைக்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் உலகப்போர் முடிவுற்று, உலகம் இயல்பை நோக்கி நகர்ந்தபோது, பிரிட்டிஷ் காலனிய அரசிடமிருந்து இந்தியா விடுதலை பெற்றது. பல்வேறு மாகாணங்களும் பலநூறு சமஸ் தானங்களும் இணைக்கப்பட்டு, இந்திய ஒன்றியம் உருவாக்கப்பட்டது, அன்றைய ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இன்று போலவே, தென் மாநிலங்களைப் பாரபட்சத்து டனே நடத்தினர். அப்படியான காலகட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களால் எழுதப்பட்ட நூல் ‘பணத்தோட்டம்’.

1940-களின் பிற்பகுதியில் பம்பாய் மாகாணம், மெட்ராஸ் மாகாணத்தை விட, பல மடங்கு பொருளாதார வளர்ச்சி பெற்றிருந்தது. அங்கு நிறைய பணப்புழக்கம் இருந்த காரணத்தினால் அதிகமான நூற்பாலைகள், பெரு நிறுவனங்கள், அதற்கேற்ற வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் என பெருமளவில் பொருளாதார வலிமைபெற்ற மாகாணமாக பம்பாய் திகழ்ந்தது.

அங்கிருந்த பெருமுதலாளிகள், தங்களது சந்தையாக சென்னையைத் தேர்ந்தெடுத்து, வர்த்தகத்தை விரிவு செய்தனர். வாரம் ஒரு தொழிற்சாலை, பம்பாயில் நிறுவப்பட்ட காலத்தில்தான் தமிழ்நாட்டில் ‘கதர் பிரச்சாரம்’ தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது.

இதனால் செல்வம் ஓரிடத்தில் குவிய தொடங்கியது, அரசும் வடநாட்டு வியாபாரிகளுக்கு ஆதரவாகச் செயல்பட தொடங்கியிருந்தது. இதை எல்லாம் விமர்சித்தும், தமிழர்களை நோக்கி கேள்வி எழுப்பியும் எழுதப்பட்ட நூல்தான் பணத்தோட்டம்.

வடநாட்டுப்பொருளாதாரத்தைத் தான் பேரறிஞர் அண்ணா ‘பணத்தோட்டம்’ என்று குறிப்பிடு கிறார். பொருளாதாரத் துறையில் திராவிட இயக்கம் கொண்டிருந்த கொள்கையை “பொருள் பாடுபடு பவனுக்குப் போய்ச் சேரவேண்டும். போய்ச் சேரும் பொருளும் பயனுள்ள காரியத்துக்குச் செலவிடப்படவேண்டும். இரண்டும் நமது கொள்கை” என்று எளிமைப்படுத்தி, வாசகருக்கு வழங்குகிறார்.

அதிகாரத்தைப் போலவே, பொருளும் பணமும் ஓரிடத்தில் குவிவதை இந்நூல் முழுக்க அண்ணா சாடுகிறார். வடநாட்டு வியாபாரிகளின் ஆதிக்கத்தை, ‘புது ஏகாதி பத்தியம்’ என்கிறார், முதலாளி-தொழிலாளி ஆகியோருக்கு இடையே ஏற்படும் பிரச்சினை களில், பயனாளிகளான பொதுமக்கள் தங்களது கருத்தைத் தெளிவுபடுத்த வேண்டும் என்கிறார்.

இன்றைக்கு ஒன்றிய அரசு, இந்த ஏகாதி பத்தியத்தின் மொத்த உருவமாக இருந்துகொண்டு நியாயமாக நமக்குப் பகிர்ந்தளிக்க வேண்டிய நிதியையும் வழங்காமல், நிதிக்குழு பரிந்துரைத்த பகிர்வையும் அளிக்காமல் பெரும் அநீதியை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.


இப்படியான சூழலில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய புத்தகம், பேரறிஞர் அண்ணாவின் ‘பணத்தோட்டம்’.

**...வாசிப்போம்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

746

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131